நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## D.V.C No. 1/2024

## R.W. 1 –ன் வாக்குமூலம்

**(எதிர்மனுதாரர் தரப்பு )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | நல்லதம்பி |
| தந்தை / கணவர் பெயர் | : | முனுசாமி |
| கிராமம் | : | வனவாசி |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **RW1** |
| வயது | : | 26 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2026–ஆம் வருடம், ஜனவரி மாதம், 19–ம்ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**மனுதாரர் ஆஜர் . அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 01.20PM

1. எனது திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம் என்றால் சரிதான். நான் B.Sc Micro Biology பட்டப்படிப்பு படித்துள்ளேன். மனுதாரர் B.Sc. Maths படித்திருப்பதாக சொன்னார். எனது திருமணம் சமயத்தில் ER Construction என்ற நிறுவனத்தில் மேற்பார்வையாளராக பணிபுரிந்து வந்தேன். மேற்படி

நிறுவனம் திருச்செங்கோட்டில் உள்ளது. அதன் உரிமையாளர் ஈஸ்வரன் என்பவர் ஆவார்.

2. திருமணம் சமயத்தில் மாதம் ரூ.14,000/- சம்பளமாக பெற்றுவந்தேன். நான் சொல்வது தவறென்றாலும் உண்மையில் திருமணம் சமயத்தில் நங்கவள்ளி யூனியன் ஆபிசில் அரசு ஒப்பந்தம் எடுத்து தனியாக கான்ட்டிராக்ட் தொழில் செய்துவந்தேன் என்றால் சரியல்ல.

3. நான் மேற்கண்டவாறு கான்ட்டிராக்ட் தொழில் செய்து வருவதாகவும், சொந்தமாக எனக்கு நிலம், வீடு உள்ளதாகவும் சொல்லித்தான் திருமணம் செய்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. திருச்செங்கோட்டில் தங்கியும் வேலை செய்வேன். திருமணத்திற்கு பிறகு நானும், எனது தாயாரும் மற்றும் மனுதாரரும் ஒரே வீட்டில் வசித்து வந்தோம் என்றால் சரிதான்.

4. திருமணத்தின்போது 8 பவுன் தங்கநகை மனுதாருக்கும், எனக்கு 1 பவுனும் சீர்வரிசையாக கொடுத்தார்கள் என்றால் அதுப்பற்றி தெரியாது. போட்ட நகைகளை எடுத்து சென்றுவிட்டார்கள். நான் சொல்வது தவறென்றாலும் மேற்படி தங்கநகைகளை நானும், எனது அம்மாவும் பிடுங்கி வைத்துகொண்டோம் என்றால் சரியல்ல. அந்த நகை போதாது என்றும், மீண்டும் நகை வாங்கி வா என்று திருமணம் ஆன நாள்முதல் கேட்டுக்கொடுமை செய்துவந்தோம் என்றால் சரியல்ல.

5. திருமணத்திற்கு 1 மாதம் பிறகு எனது மனைவி கருவுற்றிருந்தார் என்றால் சரிதான். அப்போது எந்த மருத்துவமனைக்கும் நான் அழைத்துச் செல்லவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு நான் மருத்துவமனைக்கு அழைத்துசென்றதற்கான ஆவணங்கள் என்னிடம் உள்ளது. ஆனால் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை.

6. அவ்வாறு ஆவணங்கள் இருப்பதாக என்னுடைய பிரமாண பத்திரத்தில் குறிப்பிடவில்லை என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியவில்லை. என் மனைவி கருவுற்றிருந்த காலத்தில் நகை, பணம் கேட்டு அவரது வயிற்றில் உதைத்து கொடுமை செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. வயிற்றில் உதைத்தது தொடர்பாக எனது மனைவி அவரது தந்தைக்கு தகவல் சொல்லி அவர் எனது வீட்டிற்கு வந்து கேட்டபோது, அவரிடம் சண்டைப்போட்டு உங்களது மகளை

அழைத்துச்செல்லுங்கள் என்று நான் பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல.

7. அந்த பிரச்சனை குறித்து அருகில் இருந்த பெரியவர்கள் வந்த சமாதானம் செய்த அறிவுரை கூறி சென்றார்கள் என்றால் சரியல்ல. என்னுடைய தொலைபேசி எண்.6369469299 ஆகும். திருமணம் ஆவதற்கு முன்னால் இருந்து மேற்படி செல்போன் எண்ணை தான் 8 வருடமாக நான் பயன்படுத்தி வருகிறேன். திருமணம் ஆனப்பின்னிட்டு தினமும் வேலைக்கு போய் வந்துக்கொண்டிருந்தேன்.
8. திருமணம் ஆன பின்னிட்டு வேறொரு பெண்ணுடன் எனது செல்போனில் பேசிக்கொண்டிருந்தேன் என்றால் சரியல்ல. அதுப்பற்றி எனது மனைவி தட்டிக்கேட்டதால் அவரை அடித்து கொடுமை செய்தேன் என்றால் சரியல்ல. அதனை தொடர்ந்து ஏற்பட்ட பிரச்சனையில் 04.12.2022 ம் தேதி எனது மனைவியிடம் இருந்து தாலியை பறித்துக்கொண்டு அவரை வீட்டைவிட்டு வெளியேற்ற முயற்சி செய்தேன் என்றால் சரியல்ல. அவ்வாறு மேற்படி காரணத்திற்காக பிரச்சனை நடைபெறவில்லை. எனது மனைவி ஒரு போன் வைத்துக்கொண்ட பேசிக்கொண்டிருந்ததால்தான் பிரச்சனை ஏற்பட்டது. யாரிடம் பேசிகொண்டிருக்கிறாய் என்று மட்டும்தான் நான் கேட்டேன். அதை வைத்து என்மீது சந்தேகப்படுகிறாயா என்று அவர் தான் பிரச்சனை செய்தார்.
9. நான் சொன்னவாறு எதுவும் நடக்கவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி பிரச்சனைக்கு சிறிதுநேரம் கழித்து 04.12.2022 ம் தேதி எனது மனைவியை தூக்கி வீட்டிற்கு வெளியே போட்டுவிட்டேன் என்றால் சரியல்ல. நான் தூக்கி போட்டதில் எனது மனைவி மயக்கமாகி விட்டார் என்றாலும், அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள் பார்த்துவிட்டு எனது மனைவியின் பெற்றோருக்கு தகவல் சொல்லி அவர்கள் வந்தார்கள் என்றாலும் சரியல்ல.
10. மேற்படி அன்றைய தினமும் ஊர் பெரியவர்கள் சமாதானம் பேசி அறிவுரை கூறி எனது மனைவியை எனது வீட்டிலேயே விட்டுவிட்டு சென்றுவிட்டார்கள் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு வளைகாப்பு நடைபெற்றதாக பக்கத்தில் இருப்பவர்கள் எனக்கு சொன்னார்கள். அதுப்பற்றி எனக்கு தெரியாது. மனுதாரரும், நானும் பக்கத்து பக்கத்து ஊரைசேர்ந்தவர்கள் என்றால் சரிதான்.

11. உண்மையில் மனுதாரர் பெற்றோர்கள் எனது வீட்டில் வளைகாப்பு வைக்க கேட்டுக்கொண்டார்கள் என்றாலும், நான் தான் மறுத்துவிட்டேன் என்றாலும் சரியல்ல. நான் சொன்னவாறு வளைகாப்பு எதுவும் நடக்கவில்லை என்றாலும், அதன் பின்னிட்டு தொடர்ந்து எனது மனைவி எனது வீட்டில்தான் இருந்தார் என்றாலும், அதன்பின்னிட்டு 02.02.2023 ம் தேதி மீண்டும் நானும், எனது தாயாரும் பணம் நகைகளை கேட்டு பிரச்சனை செய்தோம் என்றாலும் சரியல்ல. மேற்படி தேதியில் எனது மனைவி எனது வீட்டில் இல்லை.
12. மேற்படி 02.02.2023 ம் தேதி நிறைமாத கர்ப்பிணி என்றும் பாராமல்மனுதாரர் வயிற்றில் எட்டி உதைத்துவிட்டேன் என்றாலும், அதனால் எனது மனைவி கீழேவிழுந்து இடுப்பு வலி ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. இதுக்குறித்து கேள்விப்பட்ட மனுதாரரின் தகப்பனார் வந்து என்னிடம் ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று கேட்டுவிட்டு எனது மனைவியை அவர்தான் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்துச்சென்றார் என்றால் சரியல்ல.
13. மேற்படி 02.02.2023 ம் தேதி நான் தான் எனது மனைவியை அடித்து வீட்டை விட்டு துரத்திவிட்டேன் என்றாலும், அதன்பின்னிட்டு எனது மனைவியை எனது வீட்டிற்கு அழைத்துச்செல்லவில்லை என்றாலும் சரியல்ல. என்னுடைய பெண் குழந்தை 2023 ம் வரும் ஜுன் மாதம் 3 ம் தேதி பிறந்தது. வனவாசி அரசு மருத்துவமனையில் என்னுடைய குழந்தை பிறந்தது. இரவு 8 மணிக்குதான் பக்கத்துவீட்டுக்காரர் போன் செய்து குழந்தை பிறந்திருப்பதாக தகவல் சொன்னார்கள். அதற்கு முன்னதாக எனது குழந்தைக்கு மூச்சுதிணறல் ஏற்பட்டு சேலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றவிவரம் எனக்கு தெரியாது.
14. நான் மருத்துவமனைக்கு சென்று குழந்தையை நான் பார்க்கவில்லை. எனது மாமனார் வந்துப்பார்த்தால் செருப்பு பிய்ந்துவிடும் என்று திட்டினார். நான் தாக்கல் செய்த பிரமாண பத்திரத்தில் 03.06.2023 ம் தேதி வனவாசி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு எனது குழந்தையை பார்ப்பதற்காக சென்றதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் என்னை குழந்தையை பார்க்கவிடவில்லை.
15. குழந்தை பிறந்த பிறகு குழந்தை எங்கிருக்கிறது, எந்த மருத்துவமனையில் இருக்கிறது என்பது பற்றி தெரிந்துக்கொள்ள நான் முயற்சிக்கவில்லை.

குழந்தை பிறப்பிற்காக மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படும்போதும், குழந்தை பிறந்த பிறகும் முறையாக எனக்கு தகவல் கொடுத்தார்கள் என்றாலும், நான் தான் சென்று பார்க்கவில்லை என்றாலும், அதனை மறைத்து நான்தான் சாட்சி சொல்லி வருகிறேன் என்றாலும் சரியல்ல.

**( கற்றறிந்த மனுதாரரின் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–01.52 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**